2nd November 1966]

அணைக்கட்டுகள்

*326 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி தாலுகாவில் உள்ள அக்கினி ஆற்று அணைக்கட்டுத் திட்ட வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துவிட்டனவா?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(உ) அதில், இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) ரூ. 17,20,000.

(உ) ரூ. 10,87,929.

* 327 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to construct a dam across Vaigai near கழுவூரணி (Kazhuvoorani) in Ramanathapuram taluk east of Ramanathapuram so as to help the ryots east of Ramanathapuram till Mandapam and also prevent wastage of Vaigai water into the sea?

THE HON. SRI V. RAMAIAH : There is no such proposal, Sir.

Vaigai Canal Modernisation Scheme

* 328 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) when the work connected with the Vaigai Canal Modernisation Scheme will be taken up; and

(b) the probable time required for the completion of the same?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The Government of India and the Planning Commission have been addressed for its technical clearance for the scheme. As soon as the clearance is accorded by the Planning Commission, the scheme will be taken up for implementation. It is premature to say now when it will be completed.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டத்தின் செலவு என்ன என்று மதிப்பிடப்படுகிறது? அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள், பலன்கள் என்ன?

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் திட்டம் பாசன ஆதாரங்களுக்கு ரொம்ப முக்கியமான திட்டம். இதிலே அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்து முடிவுக்கு வந்திருக்கிறது. இதற்கு 3.95 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.